**அக்டோபர்: 06**

## ஆண்டவரின் கெத்செமனே ஜெபம்

**வாசிக்க: மத்தேயு 26:36-45**

இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது, நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். அவர் மூன்றுதரம் அவர்களை விட்டுப்போய், அதே வார்த்தைகளையே சொல்லி, ஜெபம்பண்ணினார். பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள், இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது என்றார்.





நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒருசிலர் தேவன் என ஒப்புகொள்வதில்லை; ஒருசிலர் மனிதராக ஏற்று கொள்வதில்லை. அவர் தேவன் என்பதை சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து வந்து நிருபித்தார். அவர் மனிதனாக வந்தார் என்பதை அவருக்கும் வலி வேதனை, விசேஷமாக பிதாவை விட்டு பிரிகிற அந்த பிரிவை மனிதனாக நினைத்து பார்த்ததால்தான் அவர் வியாகுலபட்டு இரத்த வியர்வை சிந்தி கெத்செமனேயில் ஜெபித்தார். இந்த கெத்செமனே ஜெபத்திலிருந்து நமக்கு என்ன கற்றுதருகிறார்..? எந்த மனிதனும், தன் வாழ்வில் வரும் எந்த சோதனையான நேரத்திலும் தேவனை சார்ந்து (ஜெபம்) இருக்கவும், தேவனுடைய சத்தத்திற்கு அர்பணித்து (தொழுதுகொள்ளுதல்), விழித்திருந்தால் அவன் அந்த சோதனையை ஜெயிக்கமுடியும். தேவனை சார்ந்து கொண்டு அர்பணிப்பதில் விழிப்பில்லாதவன் தோல்வியடைந்து மனம்துவண்டு போவான். அதற்கு மிக சிறந்த உதாரணம் நம் ஆண்டவரும் அவருடைய சீஷர்களுமேயாகும். விழித்திருந்து ஜெபித்தவர் சிலுவையில் வெற்றி சிறந்து உயிரோடு எழுந்தார். தூங்கி வழிந்து ஜெபிக்க மறந்தவர் விசுவாசமிழந்து, பயந்து ஓடி ஒளிந்தனர். ஆகவே நாம் எப்போதும் விழித்திருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ள வேண்டும். செய்வீர்களா..?

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள், ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். மத்தேயு 26:41

**<u>ஜெபம்</u>**

பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, எல்லா சூழ்நிலையிலும், உம்மை உறுதியாக பற்றிக்கொண்டு, அர்ப்பணித்து ஜெபத்தில் விழித்திருக்க கிருபை தாங்கப்பா. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

